சார்பு நீதிமன்றம், மேலூர்
நாள் :04.02.2025
வா.சா.1 – ரவி S/o சோலைமலை
O.S No.67 /2022:
(சாட்சி திரும்ப வரவழைக்கப்பட்டு சத்திய பிரமாணத்தின் பேரில் விசாரணை செய்யப்பட்டார்.)
பிரதிவாதி தரப்பில் குறுக்கு விசாரணை :

வாதி மற்றும் பிரதிவாதி 2 பேரும் என்னுடைய நண்பர்கள் ஆவர். வாதி சுமார் 10-12 ஆண்டுகளாக சிங்கப்பூரில் இருந்தார். வாதி மேலூருக்கு வந்து சுமார் 3 ஆண்டுகள் ஆகிறது. வாதி மற்றும் பிரதிவாதி இருவரும் சொத்தை கிரையம் பேசி தெரிந்தவர் என்பதால் என்னை வரவேண்டி இருவருமே அழைத்தார்கள். 22.10.2019 அன்று இருவருமே என்னை கூப்பிட்டார்கள். 2019ம் ஆண்டு வாதி, சிங்கப்பூரில் தான் இருந்தார் என்றால் இல்லை, அவர் இங்கு தான் இருந்தார். நான் தான் சொத்தை வைத்து பணம் ஏற்பாடு செய்து கொடுக்கிறேன் என்று உறுதியளித்து சொத்தின் பத்திரத்தை வாங்கி சிங்கப்பூரில் இருந்த வாதி அழகரிடம் பேசினேன் என்றால் சரியல்ல. பிரதிவாதி சௌந்தரபாண்டியன் ஒத்திக்காக வேண்டி பணம் பெற்றுத்தரும்படி தான் என்னிடம் கூறினார் என்றும், நான் தான் கடன் ஒப்பந்தமாக வாதியிடம் பேசி ஏற்பாடு செய்திருக்கிறேன் என்றால் சரியல்ல, அவர்கள் இருவரும் பேசி தான் என்னை நடுவுநிலைமையில் இருக்கும்படி கூறினார்கள். வாதி எனக்கு மிகவும் நெருக்கமானவர் என்றால் சரியல்ல, வாதி பிரதிவாதி இருவருமே எனக்கு நெருக்கமானவர்கள் தான். வாதியிடம், பிரதிவாதி வழக்கு சொத்தை வைத்து ரூ.3,00,000/-ஒத்திக்கு கடனாக பெற்றார் என்றால் சரியல்ல, கிரையம் பேசி ரூ.5,00,000/-முன்பணம் சௌந்தரபாண்டியன் பெற்றுகொண்டார். மீதம் ரூ.2,00,000.- கொடுக்கவேண்டியிருந்தது அதை காலம் கடத்தி கொண்டே வந்தார். நான் வாதிக்கு ஆதரவாளர் என்பதால் அவருக்கு ஆதரவாக பொய் சாட்சியம் அளிக்கிறேன் என்றும் பிரதிவாதியிடம் ரூ.5,00,000/- வாங்கவில்லை

என்றால் சரியல்ல. பிரதிவாதி 3லட்சம் ரூபாயை வாதியிடம் கொடுத்து கடனை முடித்து கொண்டார் என்றும் அந்த விபரம் எனக்கு நன்றாக தெரியும் என்றால் சரியல்ல. அவர் பணமே கொடுக்கவில்லை. மேற்படி விபரம் எனக்கு நேரடியாக தெரியாது என்றும், வாதி கூறி தான் தெரியும் என்றால் இல்லை. ஊர் முன்னிலையில் இருவரும் பேசும் போது நான் பார்த்திருக்கிறேன். எந்த தேதியில் பேசிகொண்டார்கள் என்பது தெரியுமா என்றால் தெரியாது. ஊர் முன்னிலையில் பேசியதாக கூறுவது பொய் என்றும், நான் வாதிக்கு ஆதரவாக சாட்சியம்அளிக்கிறேன் என்றால் சரியல்ல. நீதிமன்றத்தில் இருந்து அழைப்பாணை வந்ததா என்றால் வரவில்லை. வாதி தான் என்னை நீதிமன்றத்தில் சாட்சியம் அளிக்க அழைத்து வந்தார். வாதியிடம் பிரதிவாதி சொத்தை விற்பனை செய்ய ஒப்பந்தம் போடவில்லை என்றும், அவர் ஒத்திக்கு 3 லட்சம் ரூபாய் தான் கடனாக பெற்றிருந்தார் என்றும் அதையும் அவர் திருப்பி செலுத்திதிவிட்டார் என்றால் சரியல்ல, அது பொய்யாகும், எனக்கு தெரியும் அவர் பணம் கொடுக்கவில்லை. வா.சா.ஆ.1 ஆவணத்தை நான் படித்து பார்த்தேனா என்றால் எனக்கு படிப்பறிவில்லை நான் படித்து பார்க்கவில்லை. வா.சா.ஆ.1 ஆவணத்தை வாதி சொல்லி தான் தெரியுமா என்றால் இருவருமே சொன்னார்கள். நான் தவறாக சொல்கிறேன் என்றும் வாதி தான் வா.சா.ஆ.1 ஆவணத்தை பற்றி என்னிடம் கூறியிருக்கிறார் என்றால் சரியல்ல, நான் வாதிக்கு ஆதரவாக பொய் சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல.

மறுவிசாரணை : இல்லை.

SAMUNDESWARIPRABHA Digitally signed by SAMUNDESWARIPRABHA Date: 2025.02.04 16:15:57 +0530

Sub Judge

Melur